தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1979 மார்ச் 19.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்தை தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டமன்றப் பேரவை நடந்து கொண்டிருக்கின்ற இந்த இடம் 1910 ஆம் ஆண்டில் ராபர்ட் கிளைவ் காலத்திலோ, அதற்கு முன்னால் ஆங்கிலேயர்கள் ஆண்ட காலத்தில்—கட்டப்பட்டது என்று நினைக்கிறேன். அப்போது வைக்கப்பட்டதுதான் அவையிலே உள்ள இந்த கடிகாரங்கள் என்று நினைக்கிறேன். அவற்றை குறிப்பாக எனக்கு முன்னால் உள்ள கடிகாரத்தை இன்று காலை 8½ மணியிலிருந்து பல தடவை பல பேர்கள் வந்து திருப்பித் திருப்பி வைக்கிறார்கள். இப்போது ஓரளவு சரியாக ஓடிக் கொண்டிருக்கிறது. இது எந்த நேரத்தில் காலை வாரிவிடும் என்று தெரியவில்லை. எங்களுக்காக அல்ல. உங்களுக்காகத் தான் இதை தெரிவிக்க விரும்புகிறேன். இதை சீர்திருத்த ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கு எனக்கு சிலர் எப்படி ஒத்துழைப்பதில்லையோ அது போல் இந்தக் கடிகாரமும் என்னோடு ஒத்துழைக்க மறுக்கிறது, என்ன செய்வது, இதை கவனிக்கிறேன்.

(1) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

தென் மாநில மின்துறை அமைச்சர்கள் மாநாடு

* குறுகிய கால வினா எண் 18—திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு, கேரளா, கர்நாடக மாநில மின்துறை அமைச்சர்களின் கூட்டம் ஒன்று கடந்த 27-2-1979 ல் திருவனந்தபுரத்தில் நடைபெற்றதா?

(ஆ) ஆம் எனில், அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) கேரள மாநிலத்திலிருந்து தொடர்ந்து மின்சாரம் வாங்குவது குறித்து ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இது 12-2-1979 முதல் ஓராண்டு காலத்திற்கானதாகும். இதன்படி ஒரு யூனிட் மின்சாரத்தின் மொத்த விலை 18 காசுகள் ஆகும்.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இருந்து வந்த $12\frac{1}{2}$ பைசா என்பது 15 பைசாவாக ஆகி, இப்போது மூன்று பைசா அதிகப்படுத்தப்பட்டு கடைசியில் 18 பைசா என்று இப்போது நாம் வாங்கிக்கொண்டிருக்கிறோம். இப்படியானால் 1,200 மில்லியன் யூனிட்டுக்கு ஏறத்தாழ 3 கோடி 60 லட்சம் ரூபாய் கேரளாவுக்கு அதிகம் கொடுக்கவேண்டியிருக்கிறது. இவ்வளவு அதிகமாக விலை கொடுத்து வாங்கும் நமக்கு கேரளா அரசு ஏதேனும் சலுகைகள் செய்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கேரளாவிலிருந்து தமிழகம் வாங்கும் மின்சாரத்திற்கு கட்டணம் முன்பு $12\frac{1}{2}$ பைசாவாக இருந்தது. பின்னால் மத்திய அரசு லெவி விதித்தார்கள். இதன் காரணமாக $2\frac{1}{2}$ காசு அதிகப்படுத்தப்பட்டு 15 காசாக ஆகியது. இப்போது நடைபெற்ற ஒப்பந்தப்படி யூனிட்டுக்கு 16 காசு என்றும், மத்திய அரசு விதித்த லெவிக்காக இரண்டு காசும் சேர்த்து யூனிட்டு ஒன்றுக்கு 18 காசு தருகிறோம். ஆனால் நமது அண்டை மாநிலமான கர்நாடகம் 23 காசு என்று பேசி நான்கு ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள் என்று கருதுகிறபோது, நாம் 18 காசு என்று வாங்குவது என்பது உண்மையிலேயே குறைவானது தான்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு கேரளாவிலிருந்து மின்சாரத்தைப் பெற்று கர்நாடகத்திற்கு தந்து கொண்டிருந்தது. அது தற்போது நிறுத்தப்பட்டிருப்பதாக தெரிகிறது. அது உண்மையா, ஆம் என்றால் அதற்கான காரணம் என்ன? மேலும் கேரளாவில் மேற்கு திசையிலிருந்து கிழக்கு நோக்கி ஓடுகின்ற ஆறுகளை திருப்பிவிடுவதன் காரணமாக தமிழகத்திற்கு பயன்படுகின்ற வகையில் ஒரு திட்டம் நீண்ட காலமாக வலியுறுத்தப்பட்டுவந்தது. தற்போது அது எந்த நிலையில் இருக்கிறது. மேற்கு நோக்கி ஓடுகின்ற ஆறுகளை கிழக்கே திருப்பிவிடுவதன் மூலமாக நம்முடைய தமிழ்நாட்டின் மின்சாரத்தை பெருக்கிக்கொள்வதற்கான வாய்ப்பு ஏதேனும் உள்ளதா?

1979 மார்ச் 19]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நாம் இப்போது ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்தம் செய்திருக்கிறோம். இதன்படி வருகின்ற ஜூன் மாதத்தோடு முடிவு அடையும், இதற்குள் 1,200 மில்லியன் யூனிட்டு தரவேண்டும் என்று சொல்லப்பட்டிருக் கிறது. அதற்குப் பின்னால் மீண்டும் இது பற்றி பேச வேண்டும். மேற்கு நோக்கிச் செல்லுகின்ற ஆறுகளை கிழக்கு நோக்கி திருப்பி விடுகின்ற விஷயம் பற்றி தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்ல இயலும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கேரளாவுக்கு அதிகப்படியான பணம் கொடுத்து நாம் மின்சாரத்தை வாங்க வேண்டிய நெருக்கடியான நிலைமையில் இருக்கிறோம். காரணம் நமக்கு மின் உற்பத்தி குறைவாக இருக்கிறது. அங்கு விலையும் ஜாஸ்தியாக இருக்கிறது. இதன் காரணமாக ஜாஸ்தி விலை கொடுத்து வாங்கி, இங்கு சாதாரணமாக இருக்கக்கூடிய பெட்டிக்கடை வைத்திருப்பவர்கள், தையல் தொழில் நடத்து கின்றவர்கள், பார்பர் ஷாப் நடத்துகின்றவர்கள் இவர்களுக் கெல்லாம் அதிகப்படியான அளவில் கட்டணத்தை கட்டம் கட்டமாக போட்டு வசூலிக்கிறோம். இப்படியில்லாமல் சாதாரண மக்களிடம் அக்கரை கொண்டு சப்ஸிடைஸ் செய்து இவர்களுக்கு குறைவான கட்டணத்தில் மின்சாரத்தை வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; பேரவைத் தலைவர் அவர்களே, நாம் வெளியில் இருந்து வாங்கக் கூடிய மின்சாரத்திற்கு அதிக விலை கொடுத்துக் கொண்டிருக்கும்போது, அதை வினியோகம் செய்யும்போது, எவ்வாறு கட்டணத்தை குறைக்க இயலும் என்று தெரியவில்லை. அவ்வாறு குறைத்துக் கொடுத்தால் நாம் இன்னும் அதிகம் செலவு செய்ய வேண்டி யிருக்கும். சப்ஸிடைஸ் பண்ணலாம் என்றால் அதற்கு தகுந்தபடி அரசாங்கத்தினிடத்தில் நிதி இல்லை.

திரு. க. சுப்பு ; பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலம் கேரள மாநிலத்திலிருந்து இங்கே தமிழகத்தின் மூலமாக மின்சாரம் வாங்கி வந்ததை நிறுத்தி விட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நேரடியாக கேரளாவிலிருந்து வாங்கு வதால், 8 கோடி ரூபாய் கர்நாடக மாநிலத்திற்கு அதிகமாகிறது. அப்படி 8 கோடி ரூபாய் அதிகமாக கொடுத்து, தமிழ் நாட்டின் மூலமாக வாங்குவதை நிறுத்தி, நேரடியாகவே 4 ஆண்டு காலத் திற்கு அப்படி வாங்க ஒப்பந்தம் செய்துகொள்ள என்ன காரணம்? இம்மாதிரி அவர்கள் முடிவு செய்வதற்கு என்ன காரணம்? இதிலே தமிழக அரசு என்ன தவறி இருக்கிறது என்பதை விளக்க கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; தலைவர் அவர்களே, கேரளாவிற்கும், கர்நாடகததிற்கும் இப்போது நேரடியாக மின் சாரத்தை எடுத்துச் செல்லுகின்ற லயன்கள் போடப்பட்டிருக் கின்றன. ஆகவே, அந்த லயன்கள் மூலமாக எவ்வளவு அதிகம் பெற முடியுமோ, அதைப் பெற்றுக் கொள்வதென்று கர்நாடக அரசு தீர்மானித்தது. ஆகவே, அவர்கள் கேரள அரசோடு பேசி, அந்த அடிப்படையிலே 4 ஆண்டு காலத்திற்கு 1000 மில்லியன் யூனிட்டுகள் தரவேண்டுமென்றும், அந்த 1000 மில்லியன் யூனிட்டுகளுக்கு மின்சாரம் தந்தாலும், தராவிட்டாலும் ஆண்டுதோறும் யூனிட்டுக்கு 23 பைசா என்று ஒப்பந்தம் செய்து கொள்வதாக அவர்கள் முடிவெடுத்திருப்பதாக எங்களுக்குத் தகவல் தரப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், கேரள, கர்நாடக அரசுகள் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் தமிழக அரசு இல்லை.

திரு. க. மருதாசலம் ; தலைவர் அவர்களே, இந்த 27-2-79 ஆம் தேதி கேரள மாநிலத்தில் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தை யில் எந்த எந்த மாநிலத்தின் முதல் அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார்கள் அல்லது அந்தத் துறை சம்பந்தப்பட்ட அதிகாரி கள் கலந்து கொண்டார்களா? என்ற விவரமும், அதேபோல், மற்ற மாநிலங்களிலேயிருந்து இந்த மின்சாரத் துறை சம்பந்தப் பட்டவர்கள் கலந்துகொண்டு முடிவெடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளவில்லை. மின்சாரத் துறை அமைச்சர்கள் கலந்து கொண்டார்கள். கேரளாவிலே முதல் அமைச்சரே மின் துறை அமைச்சராக இருக்கிறார். அந்தந்த மாநிலங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டார்கள், தென் மாநிலங்கள் என்பது 4 மாநிலங்களை பொருத்தது. இது 3 மாநிலங்களைச் சேர்ந்த பிரச்னை.

திரு. சி. கோவிந்தராசன் ; தலைவர் அவர்களே, மின்சார கட்டணம் மத்திய எக்சைஸ் வரி 1978 மார்ச் 1 ஆம் தேதி முதல் 3 பைசா அதிகம் கொடுக்க வேண்டுமென்று வந்திருக்கிறது. இதனால் வீட்டு விளக்குகளுக்கு 35 பைசாவிலிருந்து 38 பைசா என்றும், சிறு வியாபாரிகள் பங்கு கடைக்காரர்கள் 45 பைசா விலிருந்து 48 பைசா கொடுக்க வேண்டுமென்றும், இப்போது இந்த 3 பைசா அதிகம் கொடுக்க வேண்டியிருப்பதால், ஏற்கனவே இருப்பதைக் குறைப்பதற்கு சாத்தியமில்லை என்று சொன்னாலும் இத்தகைய அதிகப்படியாக கொடுக்கவேண்டிய பணச் செலவிற்கு விவசாயிகள், சிறு கடைக்காரர்கள், வீட்டு உபயோகத்தின் மேல் அந்த வரியைப் போடாமல், பெரும் தொழில்களுக்குப் போடு வதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

1979 மார்ச் 19]

அதேபோல், இந்த மின்சாரத்தை அளப்பதற்கு வைக்கப்பட்டிருக் கக்கூடிய எந்திரம் அதாவது தமிழகத்தினுடைய மின் வாரிய எல்லையில் அளப்பதற்கான கருவி மீட்டர் பழுதடைந்துவிட்ட தாக ஆடிட் சுட்டிக்காட்டியது, சரியாகி விட்டதா? அளப்பதிலே கோளாறு, மின்சாரம் வருவதிலே கோளாறு இருக்கிறது என்று ஆடிட் சுட்டிக்காட்டியது இப்போது சரியாகி விட்டதா என்பதை யும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மின்சாரத்தை அளப்பதிலே கோளாறு இல்லை. இந்தக் கட்டணத்தை இங்கே போடுவதா, வேண்டாமா என்பதைப் பற்றி உத்திரவாதம் பெற, மின் வாரிய ஆண்டு நிதிநிலை அறிக்கை பற்றி விவாதிக்கின்றபோது விரிவாகப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, மத்திய அரசு நம்முடைய மின்சார வாரியத்தின் மீது வரி போட்டிருக் கிறார்கள். இந்த வரியை ஈடுகட்டுவதற்கு, அதிகக் கட்டணம் செலுத்துவதால் எவ்வளவு ரூபாய் மின்சார வாரியத்திற்கு அதிகமாகக் கிடைக்கிறது? 17 கோடி ரூபாய் மின் வாரியம் செலுத்த வேண்டியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். இந்த 17 கோடி ரூபாயை ஈடுகட்டுவதற்காக, இப்போது போடப்பட்டுள்ள கட்டண வசூல் மூலம் உங்களுக்கு வருவாய் பெருகியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மத்திய அரசு போட்ட வரியை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நாம் எழுதினோம். அதன் விளைவாக, நம்முடைய மாநிலத்திலே இருந்து உபயோகப்படுத்தியதற்கு நாம் வசூலிக்கவில்லை. இப்போதுதான் அதற்கான விதிமுறைகள் போட்டு, வசூலிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், இதனைத் தவணைகளில் செலுத்துவதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம். இதன்மூலம் எவ்வளவு வருகிறது என்பதைப் பார்த்த பிறகுதான் செலவைக் கழித்துவிட்டு எவ்வளவு வித்தியாசம் வருகிறது என்பதைச் சொல்ல முடியும்.

திரு. சின்னச் சேலம் மா. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, பிரான்சு நாட்டிலே கடல் அலைகளிலே இருந்து மின்சாரத்தை எடுக்கின்றார்கள். அதைப் போல் தமிழ் நாட்டிலும், கடல் அலைகளிலிருந்து மின்சாரம் எடுக்க தமிழக அரசு முயற்சி எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது கேரளாவிலிருந்து வருகிற மின்சாரத்தைப் பற்றியது. கடல் அலைகளைப் பற்றித் தனியாகக் கேள்வி போடவும்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, கேரள அரசோடு, கர்நாடகம் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் போது, தமிழக அரசு அழைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், தமிழ்நாடு அரசு மூலமாக கேரளாவிலிருந்து கர்நாடக அரசு மின்சாரம் பெற்றுக்கொண்டு வந்தது. அதன் காரணமாக இன்விடேஷன் அனுப்பப்படவில்லை என்று சொல்லப் படுகிறது. அதுதான் காரணமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதுவல்ல காரணம். கர்நாடக அரசு தாங்களே தனியாகப் பேச வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக் கொண்டார்கள். சரி என்று ஒப்புக்கொண்டோம்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16–3–79 அன்று நடைபெற்ற மின்சாரத் துறை தொழிலாளர் சம்மேளனத்திற்கு கேரள முதல் அமைச்சரும், மின்சாரத் துறை அமைச்சருமான வாசுதேவன் நாயர் அவர்கள் வந்தார்கள் என்று இருக்கிறது. நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அவர்களைச் சந்தித்தார்களா? 27–2–79 அன்று நடந்த பேச்சுவார்த்தைகள் சுமுகமாக இருந்ததா? கேரள அமைச்சர் அவர்கள் இணக்கமாக நடந்து கொண்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மிகவும் சுமுகமான சூழ்நிலையில் பேச்சுவார்த்தைகள் நடந்தது. அவர் இங்கே வந்தபோதும் நான் தொடர்பு கொண்டேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், கனம் அமைச்சர் அவர்கள் வெற்றிகரமாக ஒப்பந்தப் பேச்சு வந்ததற்குப் பிறகும், இங்கே மின்சாரம் போதுமான அளவுக்கு வரவில்லை. இன்றைய தினம், 15, 20 தினங்களாக என்னுடைய குடியாத்தம் தொகுதி யில் பஞ்சாலைகள் எல்லாம், சிறு தொழில்கள் எல்லாம் போது மான அளவுக்கு மின்சாரம் இல்லாத காரணத்தால், 6 மணி நேரம் லே-ஆப் கொடுக்கப்பட்டு, அதனால் குழப்ப நிலை அங்கே உள்ளது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதே போன்று, விவசாயிகளுக்கு பல நேரத்திலே மின்சாரம் கொடுப் பதற்கு பதிலாக, இரவு காலத்தில் கொடுக்கப்படுகின்றது என்பதும் தெரியுமா? ஆகவே, உடனடியாக அதற்கான ஏற்பாடு கள் என்ன செய்யப் போகிறார்கள்?

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, இது கோடைக்காலம். ஆகையால் மின் உச்ச தேவையைச் சரி செய்வது மிகச் சிரமம். எனர்ஜி என்பது வேறு, எத்தனை

1979 மார்ச் 19]

மில்லியன் யூனிட்ஸ் என்பது வேறு. விவசாயப் பம்ப் செட்டுகளை பொறுத்தவரை மின்சாரம் கொடுப்பதைப் பொறுத்து இது எப்போதும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஸ்டாகரிங் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு கோதண்டராமன் அவர்கள் இது சம்பந்தமாக ஏற்கனவே எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக் கிறேன்.

மாவட்ட வருவாய் அதிகாரிகள் பதவிகள்

* வினா எண். 460—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஐ. ஏ. எஸ். அதிகாரிகளைக் கூடுதல் கலெக்டர் என்ற பெயரில் மாவட்ட வருவாய் அதிகாரிகட்குப் பதிலாக நியமிக்கும் முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம். ஐ. ஏ. எஸ். அதிகாரிகளைக் கூடுதல் கலெக்டர் என்ற பெயரில் மாவட்ட அதிகாரிகட்குப் பதிலாக மூன்று மாவட்டங்களில் நியமனம் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, வருவாய்த் துறையில் கீழ்மட்டத்தில் நீண்டகாலமாகப் பணியாற்றி வரக் கூடியவர்கள் முறைப்படி பதவி உயர்வு பெற்று மேலதிகாரிகளாக வருவதற்கு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ள முறை பாதக மாக உள்ளதால் ஏற்கனவே இருந்த முறையையே அரசு அமலுக்குக் கொண்டு வருமா? ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1960-ல் 9 இடங் களில்தான் டி. ஆர். ஓ. பதவிகள் இருந்தன. இப்போது 46 இடங்களாக உயர்த்தப்பட்டுள்ளன. ஆகையால் அவர்களுக்குப் பதவி உயர்வுக்கான வாய்ப்பு அதிகம் என்ற அடிப்படையில் இதை மறு பரிசீலனை செய்யும் உத்தேசம் இல்லை.

திரு. எஸ். வி. இராமசாமி : ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை மாவட்டங்களில் வருவாய்த் துறை அதிகாரிகளாக நியமிப்பதால் அந்தத் துறையில் கீழிருந்து வரக்கூடியவர்களுக்கு வாய்ப்புகள் பாதிக்கப்படுகின்றன. ஐ. ஏ. எஸ். அதிகாரிகளும் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகளாகப் பணியாற்றுவதை 'இன்பிரியர்' ஆகக் கருதுகிறார்கள். இந்தக் குறைபாட்டைப் பற்றி அரசு பரிசீலிக்குமா?